BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகம் தனது பயணிகளுக்கு 100,000 முகக் கவசங்களை வினியோகிக்க இருக்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 11, 2020) – ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிறுவனமானது, தனது பயணிகளுக்கு, மருத்துவம் அல்லாத 100,000 முகக் கவசங்களை ஜூன் மாதம் 22 ஆம் தேதி முதல், இலவசமாக வினியோகிக்க இருப்பதாக ப்ராம்ப்ட்டன் நகர் மன்றத்தின் சார்பாக மேயர் பேட்ரிக் ப்ரவுன் தெரிவித்தார்; இது ப்ராம்ப்ட்டன் நகரை பொதுமக்களுக்காக திறந்து விடுவது மற்றும் மீட்புக்கான திட்டத்தின் முதல்படியாக இருக்கும் எனவும், கையிருப்பில் முகக்கவசங்கள் இருக்கும் வரை வினியோகிக்கப்படும் என்றும் கூறினார்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தைச் சேர்ந்த ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்களில், இந்த மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் வினியோகிக்கப்படும்.

மேற்கொண்டு விபரங்கள் வரவிருக்கும் வாரங்களில் அறிவிக்கப்படும்.

பொது போக்குவரத்து பேருந்துகளில் முகக் கவசங்களை அணிய வேண்டும் என பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ அரசு ஆகியோர் பரிந்துரைத்தபடி, தற்போது ப்ராம்ப்ட்டன் நகர பேருந்துகளில் பயணம் செய்வோர் மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை பேருந்துகளில் மற்றும் பேருந்து முனையங்களில் இருக்கும்போது அணிவதை வலியுறுத்தி பரிந்துரைக்கப்படுகிறது.

முகக் கவசங்கள் அணிவது கட்டாயமாக இருக்கும்போது, இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள், அல்லது குறைபாடுகள் உள்ளவர்கள் அல்லது முகமூடி அணிவதைத் தடுக்கும் வகையிலான பிற மருத்துவ நிலைமைகள் கொண்டவர்கள் முகக் கவசம் அணியத் தேவையில்லை.

மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை எவ்வாறு சரியாக அணிவது, பொருத்துவது, அகற்றுவது மற்றும் சுத்தம் செய்வது என்பவை உட்பட, மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பீல் ப்ப்ளிக் ஹெல்த் வலைத்தளம் மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்க வலைத்தளத்தைப் வலைத்தளத்தைப் பார்வையிடவும்.

**கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

முகக் கவசம் அணிந்திருந்தாலும் கூட, பேருந்துகள், முனையங்கள் மற்றும் பஸ் நிறுத்தங்களில் தொடர்ந்து உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் பயணிகளைக் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல் , தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கோவிட்-19 தொற்று பரவல் சமயத்தில், ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து முனையங்களில் வைத்து, பேருந்து பயணிகளுக்கு 100,000 முகக் கவசங்களை நாங்கள் வினியோகிக்க இருக்கிறோம் என்பதை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். நீங்கள் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் ஒரு பயணி என்றால், உங்கள் மீதும் மற்றவர் மீதும் நீங்கள் அக்கறை கொண்டு, இந்த முகக் கவசங்களைப் பெற்று, பேருந்துகளில் பயணிக்கும் போதும், பேருந்து முனையங்களில் காத்திருக்கும்போதும் அவற்றை அணிய வேண்டும் என உங்களை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்; ஒவ்வொருவரின் உடல் நலன் மற்றும் பாதுகாப்பிற்காகவும், மருத்துவம் அல்லாத உங்கள் முகக் கவசத்தை முறையாக எப்படி அணிவது, பொருத்துவது, அகற்றுவது மற்றும் தூய்மை செய்வது என அறிய பீல் ப்ப்ளிக் ஹெல்த் மற்றும் ஒன்ட்டேரியோ அரசின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும்.”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“நமது நகர் மன்றத்திற்கு சுகாதாரம் மற்றும் பாதுகாப்பே முன்னுரிமை கொண்ட விஷயமாகும், - அதுவும் குறிப்பாக கோவிட்-19 தொற்றுப் பரவல் சமயத்தில் மக்கள் நடமாட்டத்தின்போது. ப்ராம்ப்ட்டன்

பேருந்து போக்குவரத்து வசதியை உபயோகிக்கும்போது மருத்துவம் அல்லாத உங்கள் முகக் கவசத்தைப் பெற்றுக்கொள்வதை நாங்கள் இலகுவாக்கியிருக்கிறோம் – நீங்கள் தினமும் பேருந்துகளில் இடம் விட்டு இடம் செல்லும்போது, சரக்கிருப்பு இருக்கும்வரை பெற்றுக்கொள்ளலாம்."

- *ரொவீனா சாண்ட்டொஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"கோவிட் தொற்று பரவலில் இருந்து ப்ராம்ப்ட்டன் நகரம் மீட்சி பெற்று திறக்கவிருக்கையில், ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்தை நமது சமுதாயத்தினருக்கு வழங்குவதற்கு நாங்கள் அர்ப்பணிப்பு கொண்டிருக்கிறோம். பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ஓன்ட்டேரியோ அரசாங்கம் ஆகியவற்றின் வழிகாட்டுதல்களுடன் , இந்த முகக் கவசங்கள் பயணிகளின் கையில் சுகாதாரமாகவும் பாதுகாப்பாகவும் சென்றடையத் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டு வருகிறோம்."

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca